This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# பாரதி இருந்த வீடு

## முதல் அங்கம்

### காட்சி – 1

மேடையின் இடதுபுறம் ஒரு நடுத்தரக் குடும்பத்தின் ஃப்ளாட். வலது பக்கம் ஒரு நவீன ஃப்ளாட். நடுவே பின் மத்தியில் ஒரு பார்க் பெஞ்சும் தேவைப்படும். தாத்தா சுப்ரமண்ய அய்யர் இடதுபக்கம் உட்கார்ந்து கொண்டு கீதையின் பதினெட்டாம் அத்யாயம் வாசித்துக் கொண்டிருக்கிறார்.

(சற்று நேரம். அவர் பேரன் ஸ்ரீராம், பதினெட்டு வயது, வருகிறான்)

ஸ்ரீராம்: தாத்தா கொஞ்ச நேரம் டிவி போடாலாமா?

தாத்தா: போடாதேன்னு சொன்னாலும் போடப் போறே. ஸ்ரீராம் ஒரே ஒரு ரிக்வஸ்ட். இந்த தமிழாக்கத் தொடர் மட்டும் வேண்டாம். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எல்லாம் மாத்தி மாத்திபோட்டு உயிரை வாங்கறாங்க. ஸாரி, வாங்கறாங்க உயிரை.

ஸ்ரீராம்: அதெல்லாம் ராத்திரிதான் தாத்தா வரும். (டிவி பெட்டியை போட சவுண்டு இரைச்சலாக இருக்கிறது) அணைக்சுர்றேன் தாத்தா. அப்பாகிட்ட சொல்லாதீங்க தாத்தா.

(அவன் ஒரு கையில் பாப்கார்ன் ஒரு கையில் கோலா பனியனுடன் தாத்தா அவன் பார்ப்பதை ஆவலுடன் கண்கொட்டாமல் பார்க்கிறார்)

ஸ்ரீராம்: (டிவியில் கவனமாக) சிக்ஸர்.

தாத்தா: கொஞ்சம் சவுண்டை கம்மியா வைப்பா. (போன் அடிக்கிறது)

தாத்தா: (அதை எடுத்து) ஆமாம். இது 4993672 தான். ஆனா நீங்க சொல்றது ராங் நம்பர். ஸ்ரீராம் கொஞ்சம் குறைச்சு வை... ஆமா சார் ஆனா இது வெங்கடேஸ்வரா ஒயின்ஷாப் இல்லை. நம்பர் சரியாத்தான்யா இருக்கு... அதெப்படி டெலிபோன் டிபார்ட்மென்டைக் கேளுங்க. சார் ராங் நம்பரை அடிச்சிட்டு.. பெருமாள் பேரை வெச்சுண்டு சாராய வியாபாரம் பண்ணா ராங் நம்பர்தான் வரும்.